முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1277

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.03.2023, புதன்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா வாழ்க
அறம்தனை காத்திடும் தேசிகா வாழ்க
மாறுதலை உலகினில் புரிய வேண்டி
மாதவ பலத்தோடுவந்த குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர்யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞானஅறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 15 ம் நாள், 29.03.2023, புதன்கிழமை)
ஊழ் போக்கும் மகாசக்தி நீயே
உயிர் காக்கும் மாதவசி நீயே
3. தவசியே தர்மத்தின் தலைவனே
தரணியோர்க்கு ஞானபலம் தருகின்ற என் அவதாரனே
பெருமைபட உன் புகழ்பாடி உலகோர் புண்ணியவழிகளை பின்பற்றி வந்தால்
கர்மவினை விலகுவதோடு உலகோர்க்கு கடைத்தேற்றமும் உறுதியாகுமப்பா
4. அப்பனே உன் நாமஜெபம் கூறி
அகிலத்தில் தர்மம் செய்யும் மாந்தர்கட்கெல்லாம்
ஒப்புகொண்டு ஆறுமுகன் உடனிறங்கி
உற்றபாதுகாப்புத் தந்து வழி நடத்தி
5. வழிநடத்தி அரங்கன் உன் ஞானமாகவே
வையகத்தில் அவர்களுக்கு சித்தி அருள்வேன்
தருகின்ற குணத்தை உயர்த்தி
தவமாக உன் வழி தொடரும் மக்களுக்கு
6. மக்களுக்கு ஆறுமுகன் என் காட்சி
மரணம் வெல்லும் சக்தி அனைத்தும்
ஆற்றல்பட இனிதே வரமாக
அவரவர்க்கும் கிட்டி மாற்றம் கிட்டும்
7. மாற்றம் தர வந்த மாதவசி நீ
மக்களை மீட்கும் மகா யோகி நீ
ஆற்றல்கருதி உன்வழி இணைந்து
அகிலத்தார் ஒன்றிணைந்தால் போதும்

8. போதுமப்பா உலகமாற்றம் சடுதி
புண்ணியவழிகொண்டே நடந்தேறும்
பூதலமெங்கும் ஞான ஆட்சி
புகலுவேன் அரங்கன் உன் நோக்கமாக வெற்றியாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—